# ஆதித்த கரிகாலனை கொன்றது யார்... கடம்பூர் மாளிகையில் நடந்தது என்ன..?

## மர்மமுடிச்சு அவிழ்ப்பாரா மணிரத்னம்?

மணிரத்னம் இயக்கத்தில் உருவாகியுள்ள 'பொன்னியின் செல்வன் – பாகம் 1' திரைப்படம், திரைக்கு வர இன்னும் சில நாட்களே உள்ளன. கல்கியின் பொன்னியின் செல்வன் நாவலை அடிப்படையாகக் கொண்ட இந்தத் திரைப்படம், கதையில் இருக்கும் முக்கியமான மர்மமுடிச்சினை அவிழ்க்குமா? என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

அதென்ன மர்மமுடிச்சு...? அதைத் தெரிந்துகொள்ள கொஞ்சம் வரலாறு அறிந்துகொள்வது அவசியம்.

கி.பி 957 முதல் கி.பி 973 வரை சோழ தேசத்தை ஆட்சி செய்தவர் மன்னர் 2ம் பராந்தகச் சோழன். 'சுந்தரச் சோழன்' என்ற பட்டப்பெயர் கொண்ட இவருக்கு ஆதித்த கரிகாலன், அருள்மொழிவர்மன் என்ற 2 மகன்களும், குந்தவை என்ற மகளும் இருந்தனர். இளவரசனும், படைத்தளபதியுமான ஆதித்த கரிகாலன், பாண்டிய மன்னர் வீரபாண்டியனுடன் போரிட்டு, அவனது தலையை கொய்ததாக வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.

வீரம் மிக்க ஆதித்த கரிகாலன், கி.பி 969ம் ஆண்டு, மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு இறந்து போகிறான். மனம் நொந்த சுந்தரச்சோழன், பொன்னால் செய்யப்பட்ட மாளிகைக்குச் சென்று தங்கி, நோய்வாய்ப்பட்டு கி.பி 973ம் ஆண்டு இறந்து போனார். இதனால், அவர், 'பொன் முற்றத்து துஞ்சிய சோழன்' என்று அழைக்கப்படுகிறார்.

சுந்தரச்சோழன் இறப்புக்குப் பின்னர், அவரது சகோதரர் கண்டாதித்தரின் மகன் உத்தமச்சோழன் அரியணை ஏறுகிறார். இவருக்கு 'மதுராந்தகன்' என்ற பெயரும் உண்டு. மூத்தோருக்கு வழிவிட்ட, சுந்தரச் சோழனின் இளையமகன் அருள்மொழி வர்மன், உத்தமச்சோழனுக்குப் பின்னர் அரியணை ஏறுகிறார். இவர்தான் சோழ தேசத்தை கடல்கடந்து விரிவுபடுத்திய, முதலாம் ராஜராஜ சோழன். சோழர் ஆட்சி காலத்தின் பொற்காலம் என்று இவரது ஆட்சிகாலத்தை தான் குறிப்பிடுகின்றனர் வரலாற்று ஆய்வாளர்கள்.

வரலாறு அறிந்துகொண்டீர்களா? இப்போது விஷயத்துக்கு வருவோம். ஆதித்த கரிகாலன் கொலையை மையப்படுத்தியே பொன்னியின் செல்வன் நாவலை உருவாக்கி யுள்ளார் கல்கி. உண்மை கதாப்பாத்திரங்களும், கற்பனை கதாப்பாத்திரங்களும் கலந்து இந்த நாவலில் உலா வரும்.

ஆதித்த கரிகாலன் கடம்பூர் மாளிகையில் வைத்தே கொலை செய்யப்படுகிறார். அங்கு




யாரெல்லாம் இருந்தனர் என்று விரிவாக சொல்லும் கல்கி, யார் கொலை செய்திருப்பார்கள்? என்ற கேள்விக்கான பதிலை வாசகர்கள் முடிவுக்கே விட்டிருப்பார். அரியணைக்கு ஆசைப்பட்ட உத்தமச்சோழன்தான் ஆதித்த கரிகாலனை கொலை செய்தான் என்ற அடிப்படையில் எழுதப்பட்ட நாவல்களும் உண்டு.

ஆதித்த கரிகாலன் கொலை பற்றி, திருவாலங்காடு செப்பேடு கூறுகிறது. ஆனால், கொலை செய்தது யார்? என்ற கேள்விக்கான பதிலை வரலாற்று ஆய்வாளர்களால் உறுதியாக கூற முடியவில்லை. உண்மையில் கடம்பூர் மாளிகை என்ற ஒன்று இருந்ததா? அதன் பின்னணி என்ன? ஆதித்த கரிகாலனை கொன்றது யார்? அது தொடர்பான வரலாற்றுக் குறிப்புகள் இருக்கின்றனவா என்று மதுரை மன்னர் திருமலைநாயக்கர் கல்லூரி, வரலாற்று ஆய்வு மைய ஒருங்கிணைப்பாளர், பேராசிரியர் ஆத்மநாதனிடம் கேட்டோம்.

"ஆதித்த கரிகாலன் கொலைச்சம்பவம், சோழர் வரலாற்றில் முக்கியமான ஒன்று. ரவிதாசன் என்கிற பஞ்சவன் பிரம்மாதிராஜன், பரமேஸ்வரன் என்கிற இருமுடிச்சோழ பிரம்மாதிராஜன், சோமன், தேவதாச கிரமவித்தன் ஆகியோர், ஆதித்த கரிகாலனை கொலை செய்த துரோகிகள் எனவும், இதில் இருவர், பாண்டிய தேசத்தில் அதிகாரிகளாக இருந்தவர்கள் எனவும் சொல்கிறது உடையார்குடி கல்வெட்டு. ஆதித்த கரிகாலன் கொலை தொடர்பாக கிடைத்திருக்கும் மிகச்சிறந்த ஆதாரம் இக்கல்வெட்டுதான்.

ஆதித்த கரிகாலனை கொலை செய்ய இவர்களுக்கு என்ன நோக்கம் இருந்திருக்க முடியும் என்பதில்தான் மர்மம் உள்ளது. சோழர்கள் வரலாற்றை விரிவாக ஆய்வு செய்த நீலகண்ட சாஸ்திரி, ஆதித்த







கரிகாலனை கொலை செய்ய மூளையாக இருந்தது உத்தமச்சோழனாக இருக்கலாம் என்று அனுமானிக்கிறார். ஏனென்றால், சுந்தரச்சோழனுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த உத்தமச்சோழன், ஆதித்த கரிகாலன் கொலை தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவருக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த ஆதித்த கரிகாலனின் தம்பி அருள்மொழி வர்மன் தான் கொலை வழக்கை தூசு தட்டி எடுத்து தண்டனை கொடுக்கிறார்.

இதில் சிலருக்கு முரண்பாடு உண்டு. குற்றவாளிகள், உத்தமச்சோழன் ஆட்சிகாலத்தில் கண்டறியப்பட்டதாகவும், பிடிப்பதற்குள் அவர்கள் நாட்டைவிட்டு தப்பியதாகவும், இறுதியில் தான் அவர்கள் சொத்துகள்முடக்கப்பட்டதாகவும் கருத்துகள் முன்வைக்கப்படுகிறது. வீர பாண்டியனின் தலையை வெட்டியதற்கான பழிவாங்கும் நடவடிக்கையாகவே ஆதித்த கரிகாலன் கொலை நடந்திருக்கலாம் என்ற கருத்தினையும் புறந்தள்ளிவிட முடியாது" என்றவர் தொடர்ந்து பேசினார்.



பேராசிரியர் ஆத்மநாதன்.

"பொன்னியின் செல்வனில், ஆதித்த கரிகாலன் கொலைச் சம்பவம் கடம்பூர் மாளிகையில் நடந்ததாக சொல்லப்படுகிறது. கடலூர் மாவட்டம், மேலக்கடம்பூர் அமிர்தேஷ்வரர் கோயில் அருகே இந்த கடம்பூர் மாளிகை இருந்ததாக நம்பப்படுகிறது. இதற்கு தெளிவான ஆதாரங்கள் ஏதும் இல்லை. அதேநேரம், குதிரை பூட்டிய தேரில் கோயில் இருப்பது போன்ற வடிவமைப்புடன் காணப்படும் இங்கு, பாதாள சுரங்கப் பாதை உண்டு. அப்படியானால், அருகே அரண்மனையோ, மாளிகையோ இருந்திருக்கலாம். இதனை அடிப்படையாக வைத்தே கடம்பூர் மாளிகையை கொலைக்களமாக தேர்ந்தெடுத்திருக்கிறார் கல்கி.

கையில் கிடைத்த சொற்ப ஆதாரங்களை வைத்து, தனது கற்பனை மூலம், பொன்னியின் செல்வனை வடித்த அவரால் கூட, ஆதித்த கரிகாலன் கொலையின் மூளையாக செயல்பட்ட நபரை சுட்டிக்காட்ட முடியவில்லை. வரலாறு என்பது ஆதாரங்களின் அடிப்படையில் கட்டமைக்கப்பட வேண்டும். அதனால்தான் இந்த விவகாரத்தில் யாராலும் எந்த முடிவுக்கும் வரமுடியவில்லை. அனைவரும் நழுவிக்கொள்கின்றனர். மணிரத்னமும் இதையேத்தான் செய்வார் என்றே எதிர்பார்க்கிறேன்" என்று முடித்தார் பேராசிரியர் ஆத்மநாதன்.

பொன்னியின் செல்வன் திரைப்படம் இரண்டு பாகங்களாக எடுக்கப்பட்டிருக் கிறது. கடம்பூர் மாளிகையில் ஆதித்த கரிகாலன் கொலை செய்யப்பட்டதோடு முதல்பாகம் முடிவடையும் என்றும், 2ம் பாகம், அருள்மொழிவர்மன், தன் அண்ணனை கொலை செய்தவர்களைக் கண்டுபிடித்து தண்டனை கொடுப்பதாக வும் இருக்கும் என்பது போன்ற தகவல்கள் உலா வருகின்றன. ஆதித்த கரிகாலனை கொன்றது யார்? என்பதை மணிரத்னம் சொல்வாரா அல்லது கல்கி போன்றே ரசிகர்கள் முடிவுக்கே விட்டுவிடுவாரா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

– எம். கணேஷ்.

